**செய்தி வெளியீடு எண்: 784** **நாள்: 27.10.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.10.2018) கோயம்புத்தூர் மாநகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் 121 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் உக்கடம் முதல் ஆத்துப்பாலம் இடையேயான உயர்மட்ட பாலப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இப்பாலம், ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரையிலான 1.34 கிலோ மீட்டர் நீளமுள்ள 4 வழி ஓடுதளம், உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பனக்கார வீதி வரை 345 மீட்டர் நீளமுள்ள இருவழி இறங்கு ஓடுதளம், டவுன்ஹால் முதல் உக்கடம் சந்திப்பு வரை 284 மீட்டர் நீளமுள்ள இருவழி ஏறு ஓடுதளம், என மொத்தம் 1.970 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகும். இப்புதிய பாலம் அமைவதன் மூலம், பொள்ளாச்சி சாலை, பாலக்காடு சாலை, டவுன்ஹால் உள்ளிட்ட கோயம்புத்தூர் மாநகர மத்தியப் பகுதிகளில் பெருமளவில் போக்குவரத்து குறையும்.

மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பேரூர் புறவழிச்சாலை ஓரத்திலுள்ள பெரிய குளத்தின் கரையை 39 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் எதிர்கால குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு 108 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, இக்குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வடவள்ளியில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிப் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.என். ஹரிஹரன், இ.ஆ.ப., கோவை மாநகராட்சி ஆணையர் முனைவர் விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**